©
தமிழ்நாடு அரசு
2018

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 6.40 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 32] சென்னை, வியாழக்கிழமை, சனவரி 25, 2018
தை 12, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

## பகுதி II – பிரிவு 2

தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொதுமக்களின் ஒரு பிரிவினரின் நலனுக்கான அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்

அரசின் அறிவிக்கைகள்

வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் சட்டம், 2017ன் கீழ் அறிவிக்கைகள்

(அ. ஆ.(நிலை) எண்.12, வணிக வரிகள் மற்றும் பதிவு (பி1), 25 சனவரி 2018,
தை 12, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049)

**எண். II(2)/வவப/100(ஆ–1)/2018**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ல் 19) –ன் பிரிவு 9 உட்பிரிவு (1), பிரிவு 11 உட்பிரிவு (1), பிரிவு 15 உட்பிரிவு (5) மற்றும் பிரிவு 16 உட்பிரிவு (1)–ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி, குழுவின் பரிந்துரைகளின்பேரில், தமிழக ஆளுநரால் பொது நலனுக்கு இது அவசியம் என்று மனநிறைவடைந்த பின்னர், 2017 ஜீன் 29 தேதியிட்ட தமிழக அரசின் அரசிதழ் அசாதாரணத்தில் பிரிவு II பகுதி 2–ல் பக்கங்கள் 85 முதல் 119–ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை அறிவிக்கை எண். II(2)/வவப/532(ஈ–14)/2017–க்கு பின்வரும் திருத்தங்கள் மேலும் இதன்மூலம் செய்யப்படுகிறது, அதாவது:-

திருத்தங்கள்

கூறப்பட்ட அறிவிக்கையில்

(i) அட்டவணையில்
(அ) வரிசை எண் 3 க்கு எதிராக நிரல் (3)ல்
(அ) இனம் (iv) இல்
(i) துணை இனம் (இ)க்காக பின்வரும் துணை இனம் மாற்றீடு செய்யப்படுகிறது, அதாவது:-

“(இ) பிரதான மந்திரி ஆவாஸ் யோஜனாவின் (நகர்புறம்)/ அனைவருக்கும் வீடுகள் (நகர்புறம்) வழங்கும் திட்டக் குழுவின் கீழ் “நிலத்தை ஆதாரமாக பயன்படுத்தி முன்பு குடிசைகளாக இருந்த அதே இடத்தில் மறு மேம்பாட்டிற்கு” தொடர்பான ஏதாவது ஒரு மூல வேலைகள் அல்லது ஒரு கட்டுமான அமைப்பு;”

(ii) துணையினம் (ஈ)க்குப் பிறகு, பின்தொடரும் துணையினங்கள் இடைசேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

(ஈ.அ) பிரதான மந்திரி ஆவாஸ் யோஜனாவின் (நகர்புறம்) /அனைவருக்கும் வீடுகள்(நகர்புறம்) வழங்கும் திட்டக் குழுவின் கீழ் மாநிலம் அல்லது ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி அல்லது உள்ளாட்சி அமைப்பு அல்லது நகர்புற மேம்பாட்டு குழுமத்தின் கூட்டமைப்பால் கட்டப்படும் மலிவு வீடுகளின் கீழ் “நலிந்த பொருளாதார பிரிவு (EWS) வீடுகளின்” தொடர்புடைய ஏதாவது மூல வேலைகள் அல்லது ஒரு கட்டுமான அமைப்பு.

(ஈ.ஆ) பிரதான மந்திரி ஆவாஸ் யோஜனாவின் (நகர்புறம்) /அனைவருக்கும் வீடுகள்(நகர்புறம்) வழங்கும் திட்டக் குழுவின் கீழ் நலிந்த பொருளாதார பிரிவு (EWS)/ குறைந்த வருமானப் பிரிவு (LIG), நடுத்தர வருமானப் பிரிவு –1 (MIG–1), நடுத்தர வருமானப் பிரிவு –2 (MIG–2) –க்காக கடன் இணைப்பு மானியத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட அல்லது வாங்கப்பெற்ற வீடுகளின் தொடர்பான ஏதாவது மூலவேலைகள் அல்லது ஒரு கட்டுமான அமைப்பு.

(iii) துணை இனம்(ஊ) க்கு பிறகு பின்வரும் துணையினங்கள் இடைசேர்க்கப்பட வேண்டும்,அதாவது:-

“ (எ) மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி அல்லது உள்ளாட்சி அதிகாரத்தினால் ஆதரவளிக்கப்பட்டு நடத்தப்படும் மதிய உணவுத் திட்டத்தின் கீழ், மதிய உணவிற்கான மையப்படுத்தப்பட்ட சமையல் மற்றும் பகிர்ந்தளித்தலுக்கான நடவடிக்கைகளை கையாளுவதற்காக உபயோகப்படும் வருமான வரிச்சட்டம், 1961 ல் (மத்திய சட்டம் 43, 1961)ன் பிரிவு 12 (அஅ) ன்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் உரிமைக்குட்பட்ட ஒரு கட்டிடம்.”

(ஆ) இனம் (V) –ல்

(i) துணையினம் (அ) இல் “நீங்கலாக” என்ற வார்த்தைக்கு “உட்பட” என்ற வார்த்தை மாற்றீடு செய்யப்பட வேண்டும்.

(ii) துணையினம் (ஈ)க்குப்பிறகு, பின்தொடரும் துணையினம் உட்சேர்க்கப்படவேண்டும், அதாவது:-

“(ஈ.ஆ) இந்திய அரசின், நிதி அமைச்சகத்தின், பொருளாதார விவகாரத் துறையின் அறிவிப்பு எண். எப் எண். 13/6/2009–ஐஎன்எஃப், 30 மார்ச் 2017 தேதியின்படி கட்டுமான அங்கீகாரம் கொடுக்கப்பட்ட மலிவு விலை வீட்டுவசதித் திட்டங்களில் உள்ள, ஒரு வீட்டிற்கு 60 சதுர மீட்டர்கள் மனை உள்ளுறை பரப்பு வரை உள்ள குறைந்த விலை வீடுகள். ”

(இ) இனம் (ix) மற்றும் அதன் தொடர்புடைய நிரல் (3) , (4) மற்றும் (5)ல் உள்ள பதிவுகளுக்கு, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:-

| (3) | (4) | (5) |
|---|---|---|
| "(ix) மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி, உள்ளாட்சி அமைப்பு, ஒரு அரசாங்க அதிகார அமைப்பு அல்லது ஒரு அரசு நிறுவனத்திற்கு, மேலே உள்ள இனம் (iii) அல்லது இனம் (vi) ல் குறிப்பிடப்பட்டவாறு சேவைகளை அளிக்கின்ற முதன்மை ஒப்பந்ததாரருக்கு ஒரு துணை ஒப்பந்ததாரரால் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017–ன் பிரிவு 2ன் கூறு (119)ல் வரையறுக்கப்பட்டவாறு அளிக்கப்படும் ஒப்பந்த பணியில் பல சேர்ந்தமைந்த வழங்கலாகும். | 6 | இருப்பினும் ஒரு அரசு நிறுவனத்திற்கு சேவைகளை வழங்கும் போது, நேர்விற்கேற்ப, மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி அல்லது உள்ளாட்சி அமைப்பால், கூறப்பட்ட நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட வேலையின் தொடர்பாக அவர்கள் வாங்கியிருக்க வேண்டும். |
| "(x) மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி, உள்ளாட்சி அமைப்பு, ஒரு அரசாங்க அதிகார அமைப்பு அல்லது ஒரு அரசு நிறுவனத்திற்கு, மேலே உள்ள இனம் (vii)ல் குறிப்பிடப்பட்டவாறு சேவைகளை அளிக்கின்ற முதன்மை ஒப்பந்ததாரருக்கு ஒரு துணை ஒப்பந்ததாரரால் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017–ன் பிரிவு 2ன் கூறு (119)ல் வரையறுக்கப்பட்டவாறு அளிக்கப்படும் ஒப்பந்த பணியில் பல சேர்ந்தமைந்த வழங்கலாகும். | 2.5 | இருப்பினும் ஒரு அரசு நிறுவனத்திற்கு சேவைகளை வழங்கும் போது, நேர்விற்கேற்ப, மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி அல்லது உள்ளாட்சி அமைப்பால், கூறப்பட்ட நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட வேலையின் தொடர்பாக அவர்கள் வாங்கியிருக்க வேண்டும். |
| "(xi) குழாய் அமைப்புப் பணிகள், தச்சுப் பணிகள், இன்னபிறவின் மூலமாக வீட்டு பராமரிப்புப் பணிகளுக்கு சேவை வழங்கும் அந்த நபர் அத்தகைய சேவையை மின்னணு வர்த்தக செயல்பாட்டாளரின் மூலமாக வழங்கும் போது, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017–ன் பிரிவு 22ன் உட் பிரிவு (1)ன்படி பதிவு பெறத் தேவையில்லை. | 2.5 | இருப்பினும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மீது விதிக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு எடுத்துக் கொள்ளப்படவில்லை (தயவு செய்து விளக்கம் எண் (iv)–ஐக் காண்க.) |
| " (xii) கட்டுமான சேவைகள், மேலே உள்ள (i), (ii), (iii), (iv), (v), (vi), (vii), (viii), (ix), மற்றும் (xi) தவிர. | | |

(ஆ) வரிசை எண்.9 க்கு எதிராக, இனம் (V)ல், நிரல் (3)–ல் உள்ள பதிவில் “இயற்கை வாயு’’ என்ற வார்த்தைக்காக “இயற்கை வாயு, கச்சா பெட்ரோலியம், மோட்டார் எரிசாராயம் (பொதுவாக பெட்ரோல் என்று அறியப்படும்), அதிவேக டீசல் அல்லது விமான போக்குவரத்து டர்பைன் எரிபொருள்” என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்;

(இ) வரிசை எண் 10க்கு எதிராக, நிரல் (3)ல் உள்ள இனம் (ii) மற்றும் அதன் தொடர்புடைய நிரல்கள் (3), (4) மற்றும் (5) இன் பதிவுகளுக்காக, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:-

| (3) | (4) | (5) |
|---|---|---|
| “ (ii) சரக்குகள் அனுப்புவதற்கான கப்பலின் கால அட்டவணை | 2.5 | இருப்பினும் சரக்குகள் மீது விதிக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு (கனரக கடத்திகள் மற்றும் டாங்கர்களை உள்ளடக்கிய கப்பல்கள், நீர்செல் கலம் நீங்கலாக) எடுத்துக் கொள்ளப்படவில்லை. (துயவு செய்து விளக்கம் எண் (iv) ஐ பார்க்கவும்) |
| (iii) இயக்குபவர் உள்ள அல்லது அல்லாத போக்குவரத்து வாகனத்திற்கான வாடகை சேவைகள், மேலே உள்ள (i) மற்றும் (ii) தவிர | 9 | |

(ஈ) வரிசை எண்.16 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்காக பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:-

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 16 | தலைப்பு 9972 | (i) ஒரு அரசாங்க அதிகார அமைப்பு அல்லது அரசு நிறுவனத்திற்கோ, மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப்பகுதி அல்லது உள்ளாட்சி அமைப்பினால் நிலம் குத்தகைக்கு விடுவதன் மூலமான சேவைகள். | இல்லை | |
| | | (ii) வரிசை எண்.3க்கு எதிராக, நிரல் (3)–இல் இனம் (i) துணை இனம் (ஆ) துணை இனம் (இ) துணை இனம் (ஈ) துணை இனம் (ஈஅ) மற்றும் துணை இனம் (iV) இன் துணை இனம் (ஈஆ) ,துணை இனம் (ஆ) , துணை இனம் (இ) ,துணை இனம் (ஈ) மற்றும் இனம் (V) ன் துணை இனம் (ஈஅ) மற்றும் இனம் (Vi) ன் துணை இனம் (இ) ன் பதிவுகளில் குறிப்பிட்டவாறு, குடியிருப்புகளின் கட்டுமானம், இன்னபிறவற்றிற்கு பலபொருள் சேர்ந்தமைந்த வழங்கல்களின் ஒரு பகுதியாக, நிலத்தை அல்லது பங்கு பிரிக்கப்படாத நிலத்தினை குத்தகை அல்லது உட் குத்தகை மூலமாக வழங்கப்படும் அத்தகைய வழங்கல்;<br><br>இருப்பினும் அத்தகைய குத்தகை மற்றும் உட் குத்தகைக்கு விதித்த தொகை கூறப்பட்ட பல | இல்லை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்தமைந்த வழங்கல்களின் மூலமாக விதிக்கப்பட்ட மொத்த தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகுந்திருந்தால், இந்த பதிவுகளில் கூறப்பட்டவை பொருந்தாது. மொத்த தொகையின் பொருளானது, இந்த அறிவிக்கையில் கொடுக்கப்பட்ட பத்தி 2–இன் காப்புரையின் நோக்கத்திற்காக அதே பொருளில் கொள்ள வேண்டும். | | |
| | | (vii) மனை விற்பனை சேவைகள், மேலே உள்ள (i) மற்றும் (ii) தவிர | 9 | |

(உ) வரிசை எண் 17– க்கு எதிராக, நிரல் (3) ல் உள்ள இனம் (vii) மற்றும் நிரல் (3),(4) மற்றும் (5)ன் தொடர்புடைய பதிவுகளுக்காக பின்தொடரும் பதிவுகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:-

| (3) | (4) | (5) |
|---|---|---|
| " (vii) சரக்குகள் அனுப்புவதற்கான கப்பலின் கால அட்டவணை | 2.5 | இருப்பினும், சரக்குகள் மீது விதிக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு (கனரக கடத்திகள் மற்றும் டாங்குகளை உள்ளடக்கிய கப்பல்கள், நீர்செல் கலம் நீங்கலாக) எடுத்துக் கொள்ளப்படவில்லை. (தயவு செய்து விளக்கம் எண் (iv) ஐ பார்க்கவும்) |
| (viii) இயக்குபவர் உள்ள அல்லது அல்லாத குத்தகை அல்லது வாடகை சேவைகள், மேலே உள்ள (i), (ii), (iii), (iv), (v), (vi) மற்றும் (vii) தவிர | சரக்குகளின் உரிமை மாற்றத்திற்கு தொடர்பான ஒரே மாதிரியான சரக்குகளின் வழங்கலின் மேல் அதே மாநில வரி வீதம் பொருந்தும். | -" |

(ஊ) வரிசை எண்.23ல் நிரல் (3)ல் இனம் (i)க்கு எதிராக நிரல் (5)–ன் நிபந்தனை எண் 1–ல் "சேவை வழங்கல்" என்ற வார்த்தைகளுக்குப் பிறகு "ஒத்த இயல்புடைய வணிகத்தின் தொடர்புடைய உள்ளீட்டு சேவைகளுக்கான உள்ளீட்டு வரி வரவு தவிர (அதாவது ஒரு சுற்றுப் பயண ஏற்பாட்டாளர் மற்றொரு சுற்றுப் பயண ஏற்பாட்டாளரிடமிருந்து பெற்றிடும் சேவை)" என்ற வார்த்தைகள் மற்றும் அடைப்புக்குறிகள் இடைசேர்க்கப்படவேண்டும்;

(எ) வரிசை எண் 23 க்கு எதிராக, நிரல் (3)–ன் இனம் (ii) மற்றும் நிரல் (3), (4) மற்றும் (5)ற்கு தொடர்புடைய இனங்களுக்காக பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:-

| (3) | (4) | (5) |
|---|---|---|
| “(ii) குழாய் அமைப்புப் பணிகள், தச்சுப் பணிகள், இன்னபிறவின் மூலமாக வீட்டு பராமரிப்புப் பணிகளுக்கு சேவை வழங்கும் அந்த நபர் அத்தகைய சேவையை மின்னணு வர்த்தக செயல்பாட்டாளரின் மூலமாக வழங்கும் போது, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017–ன் பிரிவு 22ன் உப பிரிவு (1)ன்படி பதிவு பெறத் தேவையில்லை. | 2.5 | இருப்பினும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மீது விதிக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு எடுத்துக் கொள்ளப்படவில்லை. (தயவு செய்து விளக்கம் எண் (iv)–ஐ காண்க.) |
| (iii) துணை சேவைகள், மேலே உள்ள (i) மற்றும் (ii) தவிர | 9 | ” |

(ஏ) வரிசை எண்.24க்கு எதிராக

(அ) நிரல் (3)ன் இனம் (i)க்கான விளக்கத்தில் கூறு (i)ல் உட்கூறு (எ)க்கு பிறகு, பின்தொடரும் உட்கூறு இடை சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

“ (ஏ) விவசாய விளைபொருள் கிடங்கில் புகையூட்டல் மூலம் தூய்மை செய்யும் சேவைகள்”

(ஆ) நிரல் (3)ல், இனம் (ii)க்கு மற்றும் நிரல்கள் (3), (4) மற்றும் (5)ற்கு தொடர்புடைய இனங்களுக்காக பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:-

| (3) | (4) | (5) |
|---|---|---|
| “(ii) கச்சா பெட்ரோலியம் அல்லது இயற்கை வாயு அல்லது இரண்டிற்கும் அகழ்வு செய்தல், சுரங்கம் தோண்டுதல் அல்லது துளையிடுவதற்கான சேவைகள் | 6 | |
| (iii) சுரங்கப் பணிகள், மின்சாரம், வாயு மற்றும் தண்ணீர் பகிர்ந்தளித்தலின் துணை சேவைகள், மேலே உள்ள (ii) தவிர | 9 | ” |

(ஐ) வரிசை எண்.25 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்காக, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:–

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| “25 | தலைப்பு 9987 | குழாய் அமைப்புப் பணிகள், தச்சுப் பணிகள்,இன்னபிறவின் மூலமாக வீட்டு பராமரிப்புப் பணிகளுக்கு சேவை வழங்கும் அந்த நபர் அத்தகைய சேவையை மின்னணு வர்த்தக செயல்பாட்டாளரின் மூலமாக வழங்கும் போது, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017–ன் பிரிவு 22ன் உட் பிரிவு (1)ன்படி பதிவு பெறத் தேவையில்லை. | 2.5 | இருப்பினும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மீது விதிக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு எடுத்துக் கொள்ளப்படவில்லை. (தயவு செய்து விளக்கம் எண் (iv)–ஐ காண்க.) |
| | | (ii) பராமரிப்பு, செப்பனிடுதல் மற்றும் நிறுவல் சேவைகள் (கட்டுமானம் தவிர), மேலே உள்ள (i) தவிர | 9 | -” |

(ஒ) வரிசை எண்.26–க்கு எதிராக, நிரல் (3)ல்

(அ) இனம்(i)ல், துணை இனம் (உ) க்குப் பிறகு, பின்தொடரும் துணை இனம் இடை சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

(உஅ) சுங்க கட்டண வீத பட்டியல் சட்டம் 1975 (மத்தியச் சட்டம் 1975 ன் 51)– ல் முதல் அட்டவணையில் அத்தியாயம் 42 (அ) 64ன் கீழ்வரும், முறையே உற்பத்தி செய்யப்படும் தோல் பொருட்கள் அல்லது காலணிகள்

(ஆ) இனம் (iii) மற்றும் நிரல் (3), (4) மற்றும் (5)க்கு தொடர்புடைய இனங்களுக்காக பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:-

| (3) | (4) | (5) |
|---|---|---|
| “ (iii) தையல் வேலை சேவைகள் | 2.5 | – |
| (iv) மற்றவர்களுக்குச் சொந்தமான இயற்பொருள்கள் உள்ளீடுகளுக்கான (சரக்குகள்) உற்பத்தி சேவைகள், மேலே உள்ள (i) (iஅ), (ii) , (iiஅ) மற்றும் (iii) தவிர | 9 | –” |

(ஒ) வரிசை எண் 32 மற்றும் அது தொடர்புடைய பதிவுகளுக்காக பதிலாக, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:–

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| “ 32 | தலைப்பு 9994 | (i) ஒரு பொது தொழிலக நீரியற் கழிவு சுத்திகரிப்பு நிலையம் மூலம் தொழிலக நீரியற் கழிவுகளின் சுத்திகரிப்பின் மூலமான வரும் சேவைகள் | 6 | – |
| | | (i) கழிவு நீர் மற்றும் குப்பை சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றுதல் மற்றும் பிற சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு சேவைகள், மேலே உள்ள (i) தவிர | 9 | –” |

(i) நிரல் (3) ல் வரிசை எண் 34 க்கெதிராக,

(அ) இனம் (iii) மற்றும் நிரல் (3), (4) மற்றும் (5)–ன் தொடர்புடைய பதிவுகளுக்காக, பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:–

| (3) | (4) | (5) |
|---|---|---|
| ” (iii) கோ கார்டிங் மற்றும் கூட்டு நடனம், ரங்க ராட்டினம், மகிழோட்டம், நீர் பூங்காக்கள், தீம் பார்க்குகளை உள்ளடக்கிய பொழுது போக்கு பூங்காக்களுக்குள் அனுமதிக்கப்படுவதன் மூலமான சேவைகள். | 9 | |
| (iiiஅ) இந்திய பிரிமியர் லீக் மற்றும் அது போன்ற ஏதாவது விளையாட்டு நிகழ்வு, பந்தயமன்றம், சூதாட்ட அரங்கம், திரைப்பட கண்காட்சிகளை உள்ளடக்கிய பொழுதுபோக்கு வசதிகளுக்கு அல்லது கேளிக்கை வசதிகளுக்கு அனுமதிக்கப் படுவதன் மூலமான சேவைகள். | 14 | ” |

ஆ. இனம் (vi)ல், அடைப்புக்குறிகள் மற்றும் எண்ணிக்கைகள் “ (iii) ”க்குப் பிறகு அடைப்புக்குறிகள் மற்றும் எண்ணிக்கைகள்“ (iiiஅ) ” இடைசேர்க்கப்படவேண்டும்..

(ii) பத்தி 2–க்காக பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்படவேண்டும், அதாவது:–

"2. மேலே உள்ள அட்டவணையில் வரிசை எண் (3) எதிராக, நிரல் (3)ல் உள்ள இனம் (1)ல், துணை இனம் (ஆ), துணை இனம் (இ), துணை இனம் (ஈ),இனம் (iv) ன் துணை இனம் (ஈ-அ) மற்றும் துணை இனம் (ஈ-ஆ); இனம் (v)ன் துணை இனம் (ஆ). துணை இனம் (இ), துணை இனம் (ஈ), மற்றும் துணை இனம் (ஈ-அ) மற்றும் இனம் (vi)ன் துணை இனம் (இ)–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிலமோ அல்லது பங்கு பிரிக்கப்படாத நிலப்பகுதியோ எதுவாக நேர்விற்கேற்ப உரிமை மாற்றம் தொடர்பான சேவைகளின் வழங்கலின் நேர்வில், அத்தகைய வழங்கலின் மதிப்பானது, அத்தகைய வழங்கலுக்கு விதிக்கப்படும் மொத்த தொகையிலிருந்து நிலத்தையோ அல்லது பங்கு பிரிக்கப்படாத நிலப்பகுதியோ எதுவாக நேர்விற்கேற்ப உரிமை மாற்றப்படுவதால் வரும் மதிப்பினை கழித்த பிறகு வரும் மதிப்பிற்கு இணையானதாகும். மேலும் அத்தகைய நிலம் அல்லது பங்கு பிரிக்கப்படாத நிலப்பகுதி நேர்விற்கேற்ப அத்தகைய வழங்கலின் மீது விதிக்கப்படும் மொத்த தொகையில் மூன்றில் ஒரு பங்காகக் கருதப்படும்.

விளக்கம்– இந்த பத்தியின் நோக்கத்திற்காக, ''மொத்த தொகை'' என்பதன் பொருளானது, மொத்த கூட்டுத் தொகையான–

(அ) மேற்கூறிய சேவைக்காக விதிக்கப்பட்ட மறுபயன் மற்றும்

ஆ. நேர்விற்கேற்ப நிலம் அல்லது பங்கு பிரிக்கப்படாத நிலப்பகுதியின் மாற்றத்திற்கு விதிக்கப்பட்ட தொகை, குத்தகை அல்லது உட்குத்தகை மூலமாக உட்பட.

(அ. ஆ. (நிலை) எண்.13, வணிக வரிகள் மற்றும் பதிவு (பி1), 25 சனவரி 2018,
தை 12, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049)

**எண். II(2)/வவப/100(ஆ–2)/2018**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ல்19) –ன் பிரிவு 11–ன் உட்பிரிவு (1)–ல், அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி, பொது நலனுக்கு இது அவசியம் என்று மனநிறைவடைந்த பின்னர், குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழக ஆளுநரால், 2017ஜீன் 29 தேதியிட்ட தமிழக அரசின் அரசிதழ் அசாதாரணத்தில் பிரிவு II பகுதி 2–ல் உள்ள பக்கங்களில் 119 முதல் 143 ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை அறிவிக்கை எண். II(2)/வவப/532(ஈ–15)/2017–க்கு மேலும் பின்வரும் திருத்தங்கள் இதன்மூலம் செய்யப்படுகிறது, அதாவது:–

<u>திருத்தங்கள்</u>

கூறப்பட்ட அறிவிக்கையில், அட்டவணையில், –

(ஏ) வரிசை எண் (3)க்கு எதிராக, நிரல் (3)இல் உள்ள பதிவில், "ஒரு அரசு அதிகார அமைப்பு" என்ற வார்த்தைகளுக்குப் பிறகு "அல்லது ஒரு அரசு நிறுவனம்" என்ற வார்த்தைகள் இடைசேர்க்கப்படவேண்டும்.

(பி) வரிசை எண்.3 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| “3அ | அத்தியாயம் 99 | அரசியலமைப்பு கூறு 243 ஜி–ன் கீழ் ஊராட்சி ஒப்படைக்கப்படும் எந்தவொரு நிகழ்ச்சிக்கும் தொடர்பாக அல்லது அரசியலமைப்பு கூறு 243 டபிள்யூ–ன் கீழ் நகராட்சி ஒப்படைக்கப்படும் எந்தவொரு நிகழ்ச்சிக்கும் தொடர்பாக மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது ஒரு அரசாங்க அதிகார அமைப்பு அல்லது ஒரு அரசு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகளின் வழங்கலில் கூறப்பட்ட பல பொருள் சேர்ந்தமைந்த வழங்கலின் மதிப்பில், சரக்குகள் வழங்கலின் மதிப்பானது 25 சதவீதத்திற்கு மிகாத வகையில் இருக்க வேண்டும். | இல்லை | இல்லை |

(சி) வரிசை எண்.16ற்கு எதிராக, நிரல் (3)ல் உள்ள பதிவில், “ஒரு வருடம்” என்ற வார்த்தைகளுக்காக, “மூன்று வருடங்கள்” என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்.

(டி) வரிசை எண்.19 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| “19அ | தலைப்பு 9965 | இந்தியாவிலுள்ள சுங்க தடை நீக்க நிலையத்தில் இருந்து இந்தியாவிற்கு வெளியே உள்ள ஒரு இடத்திற்கு விமானத்தின் மூலம் சரக்குகளை ஏற்றிச்செல்லும் சேவைகள். | இல்லை | இந்த வரிசை எண்ணில் இருக்கும் எதுவும் 2018 செப்டம்பர் 30ம் நாளுக்குப் பிறகு பொருந்தாது. |
| 19ஆ | தலைப்பு 9965 | இந்தியாவிலுள்ள சுங்க தடை நீக்க நிலையத்தில் இருந்து இந்தியாவிற்கு வெளியே உள்ள ஒரு இடத்திற்கு கப்பல் மூலம் சரக்குகளை ஏற்றிச்செல்லும் சேவைகள். | இல்லை | இந்த வரிசை எண்ணில் இருக்கும் எதுவும் 2018 செப்டம்பர் 30ம் நாளுக்குப் பிறகு பொருந்தாது. |

(இ ) வரிசை எண்.22ற்கு எதிராக, நிரல் (3)ல் உள்ள பதிவில், இனம் (ஆ) விற்கு பிறகு, பின்தொடரும் இனம் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

"(இ) மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு போக்குவரத்து சேவைகள் அளிக்கும் ஒரு நபருக்கான, பள்ளி, முன்கல்விக் கூடம், மற்றும் மேல்நிலை கல்வி அல்லது அதற்கு இணையானது மூலமாக சேவைகள் வழங்கும் கல்வி நிறுவனத்திற்கு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் போக்குவரத்துக்காக செய்யப்படும் சேவைகள்";

(எப்) வரிசை எண்.29 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| "29அ | தலைப்பு 9971 அல்லது தலைப்பு 9991 | மத்திய அரசின் குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடலோர காவல் அலுவலகப் பணியாளருக்கு, கடல்படை குழு காப்பீட்டு நிதியினால் அளிக்கப்படும் அல்லது அளிக்க சம்மதித்து காப்பீட்டு திடடத்தினால் கொடுக்கப்படும் சேவைகள். | இல்லை | இல்லை" |

(ஜி)வரிசை எண்.36க்கு எதிராக, நிரல் (3)ல் உள்ள பதிவில், இனம் (இ) ல் "ஐம்பது ஆயிரம்" என்ற வார்த்தைகளுக்காக, "இரண்டு லட்சம்" என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(எச்) வரிசை எண்.36 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| "36அ | தலைப்பு 9971 அல்லது தலைப்பு 9991 | வரிசை எண்கள் 35 அல்லது 36–இல் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டு திட்டங்களுக்கு மறு காப்பீட்டின் வழியாக வரும் சேவைகள். | இல்லை | இல்லை" |

(ஐ) வரிசை எண் 39 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| "39அ | தலைப்பு 9971 | சிறப்பு பொருளாதார அலகில் அமைந்துள்ள ஒரு பல்முனை சேவைகள் வழங்கும் சிறப்பு பொருளாதார சேவை மைய (ஐஎப்எஸ்சி) தகுதியை உடைய பொருளாதார சேவைகள் வழங்கும் இடையீட்டாளர்களால் இந்தியாவிற்கு வெளியே உள்ள வாடிக்கையாளருக்கு இந்திய | இல்லை | இல்லை" |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணம் (INR) அல்லாத நாணயங்களில் வழங்கப்படும் சர்வதேச பொருளாதார சேவைகள்.<br><br>விளக்கம்– இந்த பதிவின் நோக்கத்திற்காக, ஐஎப்எஸ்சி (IFSC)–இல் பொருளாதார சேவை வழங்கும் இடையீட்டாளர் ஒரு நபராவார்,–<br><br>(i) இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட அத்தகையவர் அல்லது பன்னாட்டு பொருளாதார சேவை மையம் (ஐஎப்எஸ்சி) ஒழுங்கு முறைக்காக நியமிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குமுறையாளர்; அல்லது<br><br>(ii) அந்நிய செலவாணி மேலாண்மை (பன்னாட்டு பொருளாதார சேவை மையம்) ஒழுங்கு முறை, 2015–ன் கீழ் இந்தியாவிற்கு வெளியில் குடியிருக்கும் ஒரு நபராக கருதப்படுபவர்.<br><br>(iii)இந்திய காப்பீடு ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி அதிகாரம் (பன்னாட்டு பொருளாதார சேவை மையம்) வழிகாட்டுதல் 2015 கீழ் ஐஎப்எஸ்சி காப்பீட்டு அலுவலகமாக பதிவு செய்தவர்; அல்லது<br><br>(iv) இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (பன்னாட்டு பொருளாதார சேவை மையம்) வழிகாட்டுதல், 2015 கீழ் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால்(SEBI) அப்படியே அனுமதிக்கப்பட்டவர். | | |

(ஜே) வரிசை எண்.45ற்கு எதிராக, நிரல் (3)ல் உள்ள பதிவில், –

(i) இனம் (அ) ல், துணை இனம் (ii) க்கு பிறகு, பின்தொடரும் துணை இனம் இடைசேர்க்கப் படவேண்டும், அதாவது:–

" (iii) மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி, உள்ளாட்சி அமைப்பு, அரசாங்க அதிகார அமைப்பு அல்லது அரசு நிறுவனம்";

(ii) இனம் (ஆ) ல், துணை இனம் (iii) பிறகு, பின்வரும் துணை இனம் இடைசேர்க்கப் படவேண்டும், அதாவது:–

"(iV) மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி, உள்ளாட்சி அமைப்பு, அரசாங்க அதிகார அமைப்பு அல்லது அரசு நிறுவனம் "

(iii) இனம் (இ) ல், துணை இனம் (ii) பிறகு, பின்வரும் துணை இனம் இடைசேர்க்கப் படவேண்டும், அதாவது:–

"(iii)மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி, உள்ளாட்சி அமைப்பு, அரசாங்க அதிகார அமைப்பு அல்லது அரசு நிறுவனம்",

(கே) வரிசை எண் 53 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| "53அ | தலைப்பு 9985 | விவசாய விளைபொருள் கிடங்கில் புகையூட்டுதல் மூலம் தூய்மை செய்யும் சேவைகள் | இல்லை | இல்லை" |

(எல்) வரிசை எண்.54 ற்கு எதிராக, நிரல் (3)ல் உள்ள பதிவில், இனம் (ஜி)க்கு பிறகு, பின்தொடரும் இனம் இடைசேர்க்கப் படவேண்டும், அதாவது:–

" (எச்) விவசாய விளைபொருள் கிடங்கில் புகையூட்டல் மூலம் தூய்மை செய்யும் சேவைகள்"

(எம்) வரிசை எண் 60க்கு எதிராக, நிரல் (3)–ன் பதிவில் "வெளியுறவுத் துறை அமைச்சகம்" என்ற வார்த்தைகள் விடப்படவேண்டும்.

(என்) வரிசை எண் 65 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| "65அ | தலைப்பு 9991 | தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 (மத்தியச் சட்டம் 2005ல் 22)–ன் கீழ் தகவல் வழங்கும் சேவைகள் | இல்லை | இல்லை" |

(ஓ) வரிசை எண்.66க்கு எதிராக, கலம் (3) ல் உள்ள பதிவில்,–

" (அஅ) நுழைவுத்தேர்வு நடத்துவதன் மூலமாக ஒரு கல்வி நிறுவனமானது நுழைவுக் கட்டண வடிவில் மறுபயன் பெறுவது"

(ii) இனம் (ஆ)–ல்

(அ) துணை இனம் (iV)ல், "மேல்நிலை வரை'' என்ற வார்த்தைகள் விடப்படவேண்டும்.

(ஆ) துணை இனம் (iV) க்கு பிறகு, பின்வரும் துணை இனம் இடைசேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

" (V) நிகழ்நிலை கல்வி இதழ்கள் அல்லது பருவ இதழ்களின் வழங்கல். "

(இ) காப்புரையில், வார்த்தைகள் அடைப்புக்குறிகள் மற்றும் எழுத்து "பதிவு (ஆ) " க்கு "இனம் (ஆ)வின் துணை இனங்கள் (i) (ii) மற்றும் (iii) " என்ற வார்த்தைகள், அடைப்புக்குறிகள் மற்றும் எழுத்துக்கள் மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(ஈ)காப்புரைக்குப் பிறகு, பின்வரும் காப்புரை இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

"இருப்பினும் கல்வி நிறுவனம் அளிக்கும் இவை மூலமான சேவைகளுக்கு, மேலும் காப்புரையில் இனம் (ஆ) வின் துணை இனம் (V) –ல் உள்ள எதுவும் பொருந்தாது,–

(i) முன் பள்ளி கல்வி மற்றும் மேல்நிலை வரை அல்லது அதற்கு இணையான; அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட தொழில் முறை பாட கல்வியின் ஒரு பகுதி.

(பி) வரிசை எண்.77–க்கு எதிராக, நிரல் (3)ன் பதிவிலுள்ள இனம் (இ) ல் "ஐந்து ஆயிரம்" என்ற வார்த்தைகளுக்காக "ஏழாயிரத்து ஐந்நுறு" என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்;.

(க்யூ) வரிசை எண்.81–க்கு எதிராக, நிரல் (3)ல் உள்ள பதிவுகளுக்காக பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்படவேண்டும், அதாவது:–

"அனுமதிக்கான உரிமையின் மூலமாக சேவைகள்–

(அ) சர்கஸ், நடனம், அல்லது நாடகம் அல்லது கூட்டு நடனம் (ballet) உள்ளிட்ட திரையரங்க நிகழ்ச்சி;

(ஆ) விருது வழங்கும் விழா, இசையரங்கு நிகழ்ச்சி, இசைத் தொகுப்பு, அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு நிகழ்வு நீங்கலாக உள்ள இசைக் கச்சேரி அல்லது ஏதோ ஒரு விளையாட்டு நிகழ்வு;

(இ) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு நிகழ்வு;

(ஈ) கோளரங்கம்,

மேலே கூறப்பட்டுள்ள இனங்கள் (அ), (ஆ) மற்றும் (இ)ல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் அல்லது இடங்களை பார்வையிட அனுமதிக்கப்படும் உரிமைக்காக பெறப்படுகின்ற மறுபயன் ஒரு தனி நபருக்கு ரூபாய்.500–க்கு மிகாமல் இருக்கும்பொழுது"

(அரசு ஆணை நிலை எண்.14, வணிக வரிகள் மற்றும் பதிவு (பி1) துறை, சனவரி 25, 2018, தை 12, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049)

**எண்.11(2) /வவப/100(ஆ-3)/2018**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017ல் (தமிழ்நாடு சட்டம் 2017/19) –ன் பிரிவு 11 உட்பிரிவு (1)–ல், அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி குழுவின் பரிந்துரைகளின்பேரில், தமிழக ஆளுநரால், பொது நலனுக்கு இது அவசியம் என்று

மனநிறைவடைந்த பின்னர், 2017ஜீன் 29 தேதியிட்ட தமிழக அரசின் அரசிதழ் அசாதாரணத்தில் பிரிவு II பகுதி 2–ல் உள்ள பக்கங்கள் 143 முதல் 146–ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை அறிவிக்கை எண். II(2)/வவப/532(ஈ–116) /2017–க்கு மேலும் பின்தொடரும் திருத்தங்கள் இதன்மூலம் செய்யப்படுகிறது, அதாவது:–

<u>திருத்தங்கள்</u>

கூறப்பட்ட அறிவிக்கையில்

(i) அட்டவணையில் வரிசை எண். (5) மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்காக, பின்தொடரும் வரிசை எண் மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| “5A | தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிகள் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ல் 19) ன்கீழ் பதிவு பெற்ற ஒரு நபருக்கு வாடகைக்கு விடுவதன் மூலமாக மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி அல்லது உள்ளாட்சி அமைப்பால் வழங்கப்படும் சேவைகள் | மத்திய அரசு, மாநில அரசு, ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி அல்லது உள்ளாட்சி அமைப்பு | தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017ன் கீழ் பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு நபரும் “ |

(ii) விளக்கத்தில் கூறு (உ) பிறகு பின்தொடரும் கூறு இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

‘ (ஊ) “காப்பீட்டு முகவர்“ என்பது காப்பீடு சட்டம் 1938 (மத்திய சட்டம் 1938ல் 4)ன் பிரிவு (2)ல் கூறு
(10)க்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அதே பொருள் கொண்டதாகும்.’

அ.ஆ.(நிலை) எண்.15, வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 25 சனவரி 2018,
தை 12, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு– 2049)

**எண்.II(2)/வவப/100(ஆ–4)/2018.**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ல் 19) –ன் பிரிவு 148ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி, தமிழக ஆளுநரால், குழுவின் பரிந்துரைகளின்பேரில், பின்தொடரும் பதிவு பெற்ற நபர்களின் வகுப்புகள் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது, அதாவது:–

(அ) குடிமை கட்டமைப்பு, வளாகம் அல்லது கட்டிடம் வடிவிலான கட்டுமான சேவைகளை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ, மறுபயனுக்கெதிராக ஏதாவது ஒரு

பதிவுபெற்ற நபருக்கு, கட்டுமான நிறுவனத்திற்கு, கட்டிட நிபுணருக்கு அல்லது கட்டிட மேம்பாட்டாளருக்கு மேம்பாட்டு உரிமையினை வழங்கும் பதிவுபெற்ற நபர்கள்; மற்றும்

(ஆ) மேம்பாட்டு உரிமைகளை வழங்குபவருக்கு, மறுபயனுக்கெதிராக, மேம்பாட்டு உரிமைகளை மாற்றுதல் வடிவில் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வளாகம், கட்டிடம் அல்லது சிவில் கட்டமைப்பு மூலம் கட்டுமான சேவைகள் வழங்கும் பதிவு பெற்ற நபர்கள்,

மேலே உள்ள கூறு (ஆ)வில் குறிப்பிடப்பட்ட, மேம்பாட்டு உரிமைகள் வடிவில் மற்றும் மேலே உள்ள கூறு (அ)வில் குறிப்பிடப்பட்ட கட்டுமான சேவைகளின் வடிவில் பெறப்பட்ட மறுபயன் மீது, பதிவு பெற்ற அந்த நபர்களின் நேர்வில், கூறப்பட்ட சேவைகளின் வழங்கலின் மீது மாநில வரி செலுத்தும் பொறுப்பானது, கூறப்பட்ட மேம்பாட்டாளர், கட்டுமானம் செய்பவர், கட்டுமான நிறுவனம் அல்லது எந்த ஒரு பதிவு செய்யப்பட்ட நபர், நேர்விற்கேற்ப, கட்டப்பட்ட வளாகம், கட்டடம் அல்லது கட்டுமான அமைப்பில் உள்ள உரிமை அல்லது உடமையை, ஒரு போக்குவரத்து செலவு ஒப்பந்தம் அல்லது ஒத்த ஒப்பந்தம் (உதாரணமாக ஒதுக்கீட்டு கடிதம்) போடுவதன் மூலம், மேம்பாட்டு உரிமைகளை வழங்கும் அந்த நபருக்கு மாற்றம் செய்யும் நேரத்தில் எழும்.

அ.ஆ.(நிலை) எண்.16, வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 25 சனவரி 2018,
தை 12 ,ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு –2049)

**எண்.II(2)/வவப/100(ஆ–5)/2018.**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017ல் (தமிழ்நாடு சட்டம் 2017ல்19) –ன் பிரிவு 11, உட்பிரிவு (1)ன்கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி, தமிழக ஆளுநரால் பொது நலனுக்கு இது அவசியம் என்று மனநிறைவடைந்த பின்னர், குழுவின் பரிந்துரைகளின்பேரில், துருவுதல் அல்லது அகழ்வு செய்யப்பட்டு பெறப்படும் பெட்ரோலிய கச்சா அல்லது இயற்கை வாயு அல்லது இரண்டிற்குமோ வழங்கப்பட்ட உரிமம் அல்லது குத்தகை மூலமான மாநிலத்திற்குள்ளேயான சேவைகளின் வழங்கல்களை, இதன் சார்பாக மத்திய அரசினால் போடப்பட்ட ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டவாறு பெட்ரோலியத்தின் லாபத்தில் மத்திய அரசின் பங்கின் வடிவில் மத்திய அரசுக்கு செலுத்தப்பட்ட மறுபயன் மீது விதிக்கப்படக்கூடிய அந்த அளவிற்கான மாநில வரியிலிருந்து இதன் மூலம் விலக்களிக்கப்படுகிறது.

அ.ஆ.(நிலை) எண்.18, வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 25 சனவரி 2018,
தை 12 ,ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு –2049)

**எண்.II(2)/வவப/100(ஆ–6)/2018**

தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ல் 19)–ன் பிரிவு (9), உட்பிரிவு (1)ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி, தமிழக ஆளுநரால், குழுவின் பரிந்துரைகளின்பேரில், 29 ஜுன் 2017தேதியிட்ட தமிழக அரசின் அரசிதழ் அசாதாரணத்தின் பிரிவு–II பகுதி 2ல் உள்ள பக்கங்கள் 3 முதல் 68ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண்.II(2)/வவப/532(ஈ–4)/2017க்கு பின்தொடரும் திருத்தங்கள் மேலும் செய்யப்படுகிறது, அதாவது:–

<u>திருத்தங்கள்</u>

கூறப்பட்ட அறிவிக்கையில்

(அ) அட்டவணை 1 ல்–2.5%

(i) வ. எண் 76 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| "76A | 13 | புளியங்கொட்டை பொடி" |

(ii) வ.எண் 78 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| "78 (A) | 1404 (அ) 3305 | கூம்புகளில் உள்ள மருதாணி பசை" |

(iii) வ. எண் 103அ மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| "103B | 2302 | அரிசி தவிடு (எண்ணெய் நீக்கப்பட்ட அரிசி தவிடு தவிர)" |

(iv) வ.எண்.165ன் நிரல் (3)ல் "உள்ளூர் குடும்ப நுகர்வோர்களுக்கு அல்லது" என்ற வார்த்தைகள் விடப்படவேண்டும்.

(எ) வ. எண் 165 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| "165 (A) | 2711 12 00<br>2711 13 00<br>2711 19 00 | உள்ளூர் குடும்ப நுகர்வோர்களுக்கு விநியோகிக்கப்படும் திரவ புரோப்பேன் மற்றும் பியூட்டேனின் கலவை, திரவ புரோப்பேன், திரவ பியூட்டேன் மற்றும் சமையல் எரி வாயு (LPG) " |

(vi) வ.எண்.198(அ)ல், நிரல் (3)ன் பதிவுக்காக "வைக்கோல், எஸ்பர்ட்டோ (esparto) அல்லது மற்ற பின்னல் செய்ய பயன்படுத்தப்படும் பொருட்களின் உற்பத்திகள்; கூடை வேலைப்பாடு மற்றும் விக்கர் வேலைகள் (wickerwork) " என்ற பதிவு மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(vii) வ.எண். 219(அ)ல் நிரல் (3)ன் பதிவுக்காக, "தடித்த இழைகள் கொண்ட பருத்தி துணி வகை(corduroy fabrics), வெல்வெட் துணிகள்" என்ற பதிவுகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(viii) வ.எண்.224(அ)ல் நிரல் (2)ல் உள்ள பதிவுக்காக "6309 (அ) 6310" என்ற பதிவுகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(ix) வ.எண்.243 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| "243 (அ) | 88 (அ) வேறு ஏதாவது அத்தியாயம் | செயற்கைக்கோள் மற்றும் செயற்கைக்கோள்கள் ஏற்றி செல்லும் வாகனங்களுக்கு பயன்படும் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கருவிகள், உபகரணங்கள், தேவையானவை, துணை கருவிகள், பாகங்கள், கூறுகள், உதிரிகள், டூல்கள், மாக்அப்ஸ், தொகுதிகள், மூலப்பொருட்கள் மற்றும் பயன்படக்கூடிய பொருட்கள்" |

(ஆ) அட்டவணை IIல்–6%

(i) வ.எண்.32(அ) மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| "32(அ அ) | 1704 | கொதிக்க வைத்த சர்க்கரையினாலான மிட்டாய் வகைகள்" |

(ii) வ.எண்.46(அ) மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| "46(ஆ) | 2201 | 20 லிட்டர் பாட்டில்களில் அடைக்கப்பட்ட குடிநீர்" |

(iii) வ.எண்.56ல், நிரல்(2)ன் பதிவுக்கு "28 அல்லது 38" என்ற பதிவு மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(iv) வ.எண்.57(அ) மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| "57(ஆ) | 2809 | உரத்தின் தரத்தைக் கொண்ட பாஸ்பாரிக் அமிலம்" |

(v) வ.எண்.56ல், நிரல்(2)ன் பதிவுக்கு "29 அல்லது 3808 93" என்ற பதிவு மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(vi) வ.எண்.78 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| "78அ | 3808 | பின்தொடரும் உயிர் பூச்சிக்கொல்லிகள், அதாவது:–<br>1.பேசில்லஸ் துரிங்கியன்சிஸ் வார் ஐஸ்ரேஸினஸ் (Bacillus thuringiensis var. israelensis)<br>2. பேசில்லஸ் துரிங்கியன்சிஸ் வார் குர்ஸ்டாகி (Bacillus thuringiensis var. kurstaki) |

| | | |
|---|---|---|
| | | **3.** பேசில்லஸ் துரிங்கியன்சிஸ் வார் காலரியே (Bacillus thuringiensis var. galleriae)<br>**4.** பேசில்லஸ் ஸ்பெரிக்கஸ் **(**Bacillus sphaericus)<br>**5.** டிரைகோடர்மா விரிடி **(**Trichoderma viride)<br>**6.** டிரைகோடர்மா உறார்சியானம் **(**Trichoderma harzianum **)**<br>**7.** சுடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் **(**Pseudomonas fluoresens)<br>**8.** பிவரியாபஸ்ஸியானா **(**Beauveriabassiana)<br>**9.**என்பிவி ஹெலிகவர்பார்மைஜிரா**(**NPV of Helicoverpaarmigera)<br>**10.** என்பிவி ஸ்போடோடெராலிடுரா **(**NPV of Spodopteralitura)<br>**11.** வேப்பிலை சம்பந்தப்பட்ட பூச்சிக் கொல்லிகள்<br>**12.** சிம்போபோகன் **(**Cymbopogan)'' |

(vii) வ.எண்.**80** மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| ''**80**(அ) | **3826** | உயிரி டீசல்'' |

(viii) வ.எண். **99**(அ) மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு பின்தொடரும் வரிசை எண்கள் மற்றும் பதிவுகள் மாற்றீடு செய்யப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| ''**99**(அ) | **3826** | மூங்கில் மரத்தால் உருவாக்கப்பட்ட கட்டிட இணைப்பு வேலைகள் |
| **99**(ஆ) | **4419** | மரத்தால் ஆன மேசை பொருட்கள் மற்றும் சமையல் அறை பொருட்கள்'' |

(ix) வ.எண். **103** மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகள் விடப்படவேண்டும்;

(x) வ.எண்.**104** மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகள் விடப்படவேண்டும்;

(xi) வ.எண்.**133**ல், நிரல் **(3)**ல் ''உறிஞ்சக்கூடிய பருத்திக் கம்பளி நூல்'' என்ற வார்த்தைகளுக்கு பிறகு ''**(**சிகரெட் வடிகட்டி குழல் தவிர)'' என்ற வார்த்தைகள் மற்றும் அடைப்புகுறிகள் சேர்க்கப்படவேண்டும்.

(xii) வ.எண்.**147**ல், நிரல் **(3)**ல் உள்ள பதிவுகளுக்காக ''நெய்யப்பட்ட துணிக்குவியல் மற்றும் சென்னில் துணிகள் (chenille fabrics), கார்டுராய் துணிகள், வெல்வெட்டு துணிகள், மற்றும் தலைப்பு **5802** அல்லது **5806** ல் கூறப்பட்ட துணிகள் தவிர'' என்ற பதிவு மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(xiii) வ.எண்.195அ மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| ‘‘195 (ஆ) | 8424 | தெளிப்பான்கள் , பக்க கிளை உள்ளடக்கிய சொட்டு நீர் பாசனம்; இயந்திர தெளிப்பான்கள்’’ |

(இ) அட்டவணை IIIல் – 9%

(i) வ.எண். (3)ல், நிரல் (3)ல் ‘‘காய்கறிகளில் இருந்து பெறப்பட்ட’’ என்ற வார்த்தைகளுக்குப் பிறகு ‘‘(புளியங்கொட்டை தூள் தவிர)’’ என்ற வார்த்தைகள் மற்றும் அடைப்புக்குறிகள் சேர்க்கப்படவேண்டும்;

(ii) வ.எண்.12ல், நிரல் (3)ல் ‘‘நிலக்கடலையின் இனிப்புகள் மற்றும் கஜக்’’ என்ற வார்த்தைகளுக்கு பிறகு, ‘‘கொதி சர்க்கரை திண்பண்டம்’’ என்ற வார்த்தைகள் சேர்க்கப்படவேண்டும்;

(iii) வ.எண்.24ல் நிரல்(3)ல் ‘‘சுவையூட்டப்படாத பொருள்’’ என்ற வார்த்தைகளுக்குப் பிறகு, ‘‘20 லிட்டர்கள் பாட்டில்களில் அடைக்கப்பட்ட குடிநீர் தவிர’’ என்ற வார்த்தைகள் சேர்க்கப்படவேண்டும்;

(iv) வ.எண்.39ல் நிரல் (3)ல் ‘‘சரக்குகளுக்கான பிற வீத அட்டவணை’’ என்ற வார்த்தைகளுக்குப் பிறகு, ‘‘உரத்தின் தரத்தைக் கொண்ட பாஸ்பாரிக் அமிலத்தை உள்ளடக்கியது’’ என்ற வார்த்தைகள் சேர்க்கப்படவேண்டும்;

(v) வ.எண்.59ல் நிரல் (3)ல் உள்ள பதிவுக்காக, ‘‘முடியின் மீது பயன்படுத்துவதற்கான தயாரிப்புகள் (கூம்பில் அடைக்கப்பட்டுள்ள மருதாணி பசை தவிர) ’’ என்ற பதிவுகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(vi) வ.எண்.87ல் நிரல் (3)ல் உள்ள ‘‘மற்றும் ஒத்த தயாரிப்புகள்’’ என்ற வார்தைகளுக்குப் பிறகு. ‘‘அட்டவணை–IIன் வ.எண். 78 (அ)க்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள உயிர் பூச்சிக் கொல்லிகள் நீங்கலாக) ’’ என்ற வார்த்தைகள், இலக்கங்கள், மற்றும் அடைப்புக்குறிகள் சேர்க்கப்படவேண்டும்;

(vii) வ.எண்.99 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகள் விடப்படவேண்டும்;

(viii) வ.எண்.137கு–ல் நிரல் (3)ல் ‘‘சிங்கில்ஸ் (shingles) மற்றும் சேக்ஸ்(shakes)’’என்ற வார்த்தைகளுக்குப் பிறகு, (மூங்கில் மரத்தாலான கட்டிட இணைப்புகள் தவிர)’’ என்ற வார்த்தைகள் சேர்க்கப்படவேண்டும்;

(ix) வ.எண்.163 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| ‘‘163 (அ) | 56012200 | சிகரெட் வடிகட்டி தண்டுகள்’’; |

(x) வ.எண். 236 (அ) மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்காக பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்;

| | | |
|---|---|---|
| “236 அ | 73239410 | காமல்லா(Ghamella) |
| 236 ஆ | 7324 | இரும்பு மற்றும் எஃகினால் ஆன சுகாதாரப் பொருட்கள் மற்றும் அதனுடைய பாகங்கள்”; |

(xi) வ.எண்.325ல், நிரல் (3)ல் உள்ள பதிவுகளுக்காக பிறகு, “திரவம் அல்லது துகள்கள் உந்துமுகப்பிற்கு, கூறுகளாக பிரிப்பதற்கு அல்லது தெளிப்பிற்கான இயந்திர உபகரணங்கள் (கையால் அல்லது வேறுவிதமாக இயக்கப்படுபவை)”; மின்னூட்டப்பட்ட அல்லது மின்னூட்டப்படாத தீ அணைப்பான்கள்; தெளிப்பு துப்பாக்கிக்கள் மற்றும் அதுபோன்ற உபகரணங்கள்; நீராவி அல்லது மணல் வெடிப்பு எந்திரங்கள் மற்றும் அதுபோன்ற ஜெட் முனைப்பு இயந்திரங்கள் (தூவான்கள், கிளை உள்ளடக்கிய சொட்டு நீர் பாசனம், இயந்திர தெளிப்பான்கள் தவிர; சொட்டு நீர் பாசன கருவிகளுக்கான குழாய் முனைகள் அல்லது தெளிப்பான்களுக்கன குழாய் முனைகள்) என்ற பதிவு மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(xii) வ.எண். 399 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| “399 அ | 8702 | உயிர் எரி பொருள்களை பிரத்தியேகமாக பயன்படுத்தி பொது போக்குவரத்திற்கு இயக்கப்படும் பேருந்துகள்” |

ஈ)அட்டவணை IVல் – 14%

(i)வ.எண். 64ல் நிரல் (3)ன் பதிவுகளுக்கு பிறகு, “போக்குவரத்திற்காக ஒட்டுநர் உட்பட பத்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கான மோட்டார் வாகனங்கள் (உயிர் எரிபொருள்களை பிரயோத்தியமாக பயன்படுத்தி பொது போக்குவரத்திற்கு இயக்கப்படும் பேருந்துகள் தவிர) ” என்ற பதிவுகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(ii)வ.எண்.288 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| “229 | எந்த அத்தியாமும் | பந்தயம், சூதாட்டம் அல்லது பந்தய மன்றத்தில் நடக்கும் குதிரை பந்தயத்தில் வெற்றி வாய்ப்பு பெறுவதன் மூலமான நடவடிக்கைக்குரிய உரிமை” |

உ) அட்டவணை Vல் – 1.5%

(i) வ.எண்.2 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகள் விடப்படவேண்டும்;

(ii) வ.எண்.3ல் நிரல் (3)ல் உள்ள பதிவுக்காக, “முழுமைபெறாத மதிப்புமிக்க கற்கள், வேலைப்பாடு செய்யப்பட்டோ அல்லது செய்யப்படாமலோ அல்லது சீராக்கப்பட்ட ஆனால் சரமாக்கப்படாத, பதிக்கப்பட்டோ அல்லது அமர்த்தப்பட்டோ, முழுமைபெறாத விலையுயர்ந்த கற்கள் போக்குவரத்திற்காக தற்காலிகமாக சரமாக்கப்பட்டது (வேலைப்பாடு செய்யப்படாத அல்லது வெறுமனே அறுக்கப்பட்டது அல்லது தோராயமாக வடிவமைக்கப்பட்டது தவிர) ” என்ற பதிவு மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(iii) வ.எண்.4ல் நிரல் (3)ல் உள்ள பதிவுக்காக, ‘‘செயற்கையான அல்லது மறுசீரமைக்கப்பட்ட முழுமைபெறாத மதிப்புமிக்க கற்கள், வேலைப்பாடற்றது அல்லது சீராக்கப்பட்ட, ஆனால் சரமாக்கப்படாத, பதிக்கப்பட்டோ அல்லது அமர்த்தப்பட்டோ; செயற்கையான அல்லது மறுசீரமைக்கப்பட்ட முழுமைபெறாத மதிப்புமிக்க கற்கள், போக்குவரத்திற்காக தற்காலிகமாக சரமாக்கப்பட்டது)’’ என்ற பதிவு மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(iv) வ. எண் 13–க்கு எதிராக, நிரல் 3–ல், ‘‘(அரக்கினாலான(lac/shellac) வளையல்கள் தவிர) ’’ என்ற வார்த்தைகள் மற்றும் சின்னங்கள் விடப்படவேண்டும்;

(v) வ.எண் 17–க்கு எதிராக நிரல் 3–ல் உள்ள பதிவுக்காக, ‘‘போலி நகைகள் (அரக்கினாலான (lac/shellac) வளையல்கள் தவிர) ’’என்ற பதிவு மாற்றீடு செய்யப்படவேண்டும்;

ஊ) அட்டவணை VIல் – 0.125%

(i) வரிசை எண் 1ல், நிரல் 3–ல் உள்ள பதிவுக்காக, ‘‘அனைத்து சரக்குகள்’’ என்ற பதிவு மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(ii) வ. எண் 2ல், நிரல் 3–ல் உள்ள பதிவுக்காக, ‘‘முழுமைபெறாத மதிப்புமிக்க கற்கள், வேலைப்பாடற்ற அல்லது வெறுமனே அறுக்கப்பட்டது அல்லது தோராயமாக வடிவமைக்கப்பட்டது’’ என்ற பதிவு என்ற பதிவு மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(iii) வ. எண் 2 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| ‘‘2A | 7103 | மதிப்புமிக்க கற்கள் (வைரம் நீங்கலாக), தரம் குறைந்த மதிப்புமிக்க கற்கள் (வைரம் நீங்கலாக) ’’ |

(iv) வ. எண் 3–ல், நிரல் 3–ல் உள்ள பதிவுக்காக, ‘‘செயற்கையான அல்லது மறுசீரமைக்கப்பட்ட முழுமைபெறாத மதிப்புமிக்க கற்கள், வேலைப்பாடற்றது அல்லது வெறுமனே அறுக்கப்பட்டது அல்லது தோராயமாக வடிவமைக்கப்பட்டது’’ என்ற பதிவு மாற்றீடு செய்யப் படவேண்டும்;

(v) வ.எண்.3 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பிறகு, பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| ‘‘4 | 7104 | செயற்கையான அல்லது மறுசீரமைக்கப்பட்ட மதிப்புமிக்க கற்கள்’’ |

2. இந்த அறிவிக்கை, 25 சனவரி 2018 அன்று நடைமுறைக்கு வரும்.

அ.ஆ.(நிலை) எண்.19, வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 25 சனவரி 2018,
தை 12 ,ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு –2049)

**எண்.II(2)/வவப/100(ஆ–7)/2018**

தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ல் 19)–ன் பிரிவு 11ன் உட்பிரிவு (1) மற்றும் (3)ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி, தமிழக ஆளுநரால், குழுவின் பரிந்துரைகளின்பேரில், 29 ஜுன் 2017தேதியிட்ட தமிழக

அரசின் அரசிதழ் அசாதாரணத்தின் பிரிவு—II பகுதி 2ல் உள்ள பக்கங்கள் 68—75ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண்.II(2)/வவப/532(ஈ—5)/2017க்கு மேலும் பின்தொடரும் திருத்தங்கள் இதன்மூலம் செய்யப்படுகிறது, அதாவது:—

திருத்தங்கள்

கூறப்பட்ட அறிவிக்கையில்,

(1) அட்டவணையில்

(i) வ. எண் 102ல், நிரல் 3—ல் உள்ள பதிவுக்காக, "கூன் இறால் தீவனம் மற்றும் இறால் தீவனம் உள்ளடக்கிய நீர்வாழ் உயிரினம் தீவனம், கோதுமை தவுடு மற்றும் எண்ணெய் பிண்ணாக்கு தவிர, செறிவூட்டப்பட்டவை மற்றும் சேர்க்கைகள், பிறசேர்க்கைகள் மற்றும் பயறுவகைகளின் உமி, புல், உலர்புல் மற்றும் வைக்கோல்களை உள்ளடக்கிய கோழித்தீவனம் மற்றும் கால்நடை தீவனங்கள்" என்ற பதிவு மாற்றீடு செய்யப் படவேண்டும்;

(ii) வ.எண். 102 (அ) மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்காக பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்; அதாவது:—

| | | |
|---|---|---|
| 102A | 2302 | எண்ணெய் நீக்கப்பட்ட அரிசி தவிடு |
| 102B | 2306 | பருத்தி கொட்டை எண்ணெய் பிண்ணாக்கு |

(iii) வ. எண் 136க்கு எதிராக, நிரல் (2)—ல் உள்ள பதிவுக்காக, "7117" என்ற பதிவு மாற்றீடு செய்யப் படவேண்டும்;

(iv) வ. எண் 137—ல், நிரல் (3)—ல், "வனவியல், தோட்டக்கலை, அல்லது விவசாயத்தில் பயன்படுத்துவது" என்ற வார்த்தைகளுக்கு பிறகு "காமெல்லா (ghamella) தவிர" என்ற வார்த்தைகள் சேர்க்கப் படவேண்டும்;

(v) வ. எண் 148—ல், நிரல் (3)ல், இனம் எண் (எ)ல் உள்ள பதிவுக்காக, "விபூதி" என்ற பதிவு மாற்றீடு செய்யப் படவேண்டும்;

(vi) வ.எண். 150 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்காக பின்தொடரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் இடைசேர்க்கப்படவேண்டும்; அதாவது:—

| | | |
|---|---|---|
| "151 | எந்த அத்தியாயத்திலும் | காது கேட்கும் கருவிகளுக்காக உற்பத்தி செய்யப்படும் பாகங்கள்" |

2. இந்த அறிவிக்கை, 25 சனவரி 2018 அன்று நடைமுறைக்கு வரும்.

அ.ஆ.( நிலை) எண்.20, வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 25 சனவரி 2018,
தை 12 ,ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு– 2049)

**No. II (2)/வவப/100(ஆ–8)/2018**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் சட்டம் 2017(தமிழ்நாடு சட்டம் 2017 ன் 19) –ல் பிரிவு 11, உட்பிரிவு (1)ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி, குழுவின் பரிந்துரைகளின்பேரில், தமிழக ஆளுநரால், பொது நலனுக்கு இது அவசியம் என்று மனநிறைவடைந்த பின்னர், 2017 ஜீன் 29ந் தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணத்தின் பகுதி II பிரிவு 2 ன் பக்கங்கள் 3–68 ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறையின் அறிவிக்கை எண்.II(2)/ வவப/532/(ஈ–4)/2017–ன் அட்டவணை IV–ல் குறிப்பிடப்பட்ட அந்த அளவு வரியிலிருந்து, சுங்க கட்டண வீதப்பட்டியல் சட்டம் 1975 (மத்திய சட்டம் 1975 ன் 51) ல் முதல் அட்டவணையில் குறிப்பிட்டவாறு அத்தியாயம் அல்லது தலைப்பு, உப தலைப்பு, கட்டண வீதப் பட்டியல் இனத்தின் கீழ்கண்ட அட்டவணையின் நிரல் (2) ல் அளிக்கப்பட்ட தொடர்புடைய பதிவின்படி, நிரல் (3)ல் குறிப்பிடப்பட்ட அந்த விவரிப்புகளின் படி மாநிலத்திற்குள் சரக்குகள் வழங்கலின் மீதான மாநில வரியானது அத்தகைய சரக்குகளின் வழங்கல் மீது, அந்த விலை மதிப்பில் சார்ந்துள்ள வழங்குநரின் விளிம்பு, கூறப்பட்ட அட்டவணையின் நிரல் (4)ல் உள்ள தொடர்புடைய பதிவுகளில் குறிப்பிடப்பட்ட வீதத்தில் கணக்கிடப்பட்ட தொகையின் மிகுதியானது என இதன் மூலம் விலக்களிக்கப்படுகிறது.

**அட்டவணை**

| வரிசை எண் | அத்தியாயம், தலைப்பு துணை தலைப்பு அல்லது கட்டண வீதப் பட்டியல் இனம் | சரக்குகளின் விவரிப்பு | வரிவீதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | 8703 | 4000 மிமீ அல்லது அதற்கு மேல் நீளம் மற்றும் பொறிஎந்திரத்தின் திறன் 1200 சிசி அல்லது அதற்கு மேலுள்ள பெட்ரோல், திரவ பெட்ரோலிய எரிவாயு (LPG) அல்லது அழுத்தப்பட்ட இயற்கை வாயு(CNG) கொண்டு இயக்கப்படும் பழைய அல்லது பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம்.<br><br>விளக்கம்:– இந்த பதிவின் நோக்கத்திற்காக, மோட்டார் வாகனத்தின் விவரக்குறிப்பானது, மோட்டார் வாகன சட்டம் 1988 (மத்திய சட்டம் 1988ல் 59) மற்றும் அதன் விதிகளின் கீழுள்ளவாறு தீர்மானிக்கப்படும். | 9% |

| | | | |
|---|---|---|---|
| 2. | 8703 | 4000 மிமீ அல்லது பொறிஎந்திரத்தின் திறன் 1500 சிசி அல்லது அதற்கு மேலுள்ள டீசலால் இயக்கப்படும் பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம்.<br><br>விளக்கம்:– இந்த பதிவின் நோக்கத்திற்காக, மோட்டார் வாகனத்தின் குறிப்புகள், மோட்டார் வாகன சட்டம்(1988) (மத்திய சட்டம் 59–1988) மற்றும் அதன் விதிகளின் கீழுள்ளவாறு தீர்மானிக்கப்படும். | 9% |
| 3. | 8703 | பொறி இயந்திர திறன் 1500சிசி க்கு மேலுள்ள பொறிஎந்திரத்தின் திறன் உள்ள பயன்பாட்டு வாகனங்களை உள்ளடக்கிய விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள் (SUVs) என பிரபலமாக அழைக்கப்படும் பயன்படுத்திய மற்றும் பழைய வாகனங்கள்.<br><br>விளக்கம்:– இந்த பதிவின் நோக்கத்திற்காக, SUV-யானது, 4000சிசி நீளமும் மற்றும் தரையிலிருந்து 170mm மற்றும் அதற்கு மேல் உயரம் கொண்ட மோட்டார் வாகனத்தை உள்ளடக்கியதாகும். | 9% |
| 4. | 87 | வரிசை எண் 1 முதல் 3 வரை குறிப்பிட்டதை தவிர அனைத்து பழைய மற்றும் பயன்படுத்திய வாகனங்கள். | 6% |

விளக்கம்:– இந்த அறிவிக்கையின் நோக்கத்திற்காக,–

(i) ஒரு வேளை, ஒரு பதிவு பெற்ற நபர்,கூறப்பட்ட சரக்குகளின் மீது, வருமான வரி சட்டம் 1961 (மத்திய சட்டம் 1961 ல் 43) –ன் பிரிவு 32–ன் கீழ் தேய்மானம் கோரும் நேர்வில், வழங்குநரின் விலைவிளிம்பினை பிரதிபலிக்கும் விலை மதிப்பானது, அத்தகைய சரக்குகளின் வழங்கலுக்காக பெறப்பட்ட மறுபயனுக்கும், வழங்கலின் தேதியில் அத்தகைய சரக்குகளின் தேய்மானத்திற்கு பிறகுள்ள விலை மதிப்பிற்குமுள்ள வித்தியாசமாகும், மேலும் அத்தகைய வழங்கலின் விலை விளிம்பு எதிர்மறையாக இருப்பின், அது புறக்கணிக்கப்பட வேண்டும்; மேலும்

(ii) வேறு ஏதாவது தருணங்களில், வழங்குநரின் விலைவிளிம்பினை பிரதிபலிக்கும் விலை மதிப்பானது, விற்பனை விலை மற்றும் வாங்கிய விலைக்குள்ள வித்தியாசமாகும், மேலும் அத்தகைய விலை விளிம்பு எதிர்மறையாக இருப்பின், அது புறக்கணிக்கப்பட வேண்டும்.

**2.** அத்தகைய சரக்குகளின் மேல், தமிழ் நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017ன் பிரிவு 2ன் கூறு (63)ல் வரையறுக்கப்பட்டவாறு உள்ளீட்டு வரி வரவினையோ, சென்வாட் வரவு விதி 2004 கீழ் வரையறுக்கப்பட்ட சென்வாட்டினையோ அல்லது மதிப்பு கூட்டுவரியின் உள்ளீட்டு வரி வரவினையோ அல்லது அத்தகைய சரக்குகளின் மீது வேறு ஏதாவது செலுத்தப்பட்ட வரியினையோ துய்த்திருந்தால், இந்த அறிவிக்கை பொருந்தாது.

3. இந்த அறிவிக்கை 2018 ஜனவரி 25 முதல் நடைமுறைக்கு வரும்.

அ.ஆ,(நிலை) எண்.21, வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1) , 25 சனவரி 2018,
தை 12, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு –2049)

**எண்.II(2)/வவப/100(ஆ–9)/2018.**

தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ல் 19) (இதன் பிறகு இந்த அறிவிக்கையில் "கூறப்பட்ட சட்டம்" என்று குறிப்பிடப்படும்) கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 11ன் உட்பிரிவு (3) உடன் படிக்கப்பட்ட பிரிவு–11–ன் உட்பிரிவு (1)ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைபடுத்தி, குழுவின் பரிந்துரைகளின்பேரில், தமிழக ஆளுநரால், பொது நலனுக்கு இது அவசியம் என்று மனநிறைவடைந்த பின்னர், 2017 நவம்பர் 14ம் தேதியிட்ட தமிழக அரசின் அரசிதழ் அசாதாரணத்தில் பிரிவு II பகுதி 2–ல் பக்கங்கள் 23–26ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை அறிவிக்கை எண். II(2)/வவப/917(உ–5)/2017–க்கு பின்வரும் திருத்தங்கள் செய்யப்படுகிறது, அதாவது:-

<u>திருத்தங்கள்</u>

கூறப்பட்ட அறிவிக்கையில்

(1) அட்டவணையில்

(அ) வரிசை எண் 1க்கு எதிராக

(i) நிரல் (2)–இல் உள்ள பதிவுக்காக பின்தொடரும் பதிவு மாற்றீடு செய்யப்படவேண்டும், அதாவது:–

"பொது நிதி வழங்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனம் அல்லது ஒரு பல்கலைக்கழகம் அல்லது இந்திய தொழில்நுட்ப நிறுவனம், இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களுரு அல்லது ஒரு பிராந்திய பொறியியல் கல்லூரி, மருத்துவமனை தவிர";

(ii) நிரல் (4)–ல் "அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறை" என்ற வார்த்தைகளுக்காக, "அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி துறை" என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(ஆ) நிரல் (4)–ல் வரிசை எண் 2 மற்றும் 4–க்கு எதிராக, "அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறை" என்ற வார்த்தைகளுக்காக, "அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி துறை" என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்;

(2) அட்டவணைக்கு பிறகு, தற்போதுள்ள *விளக்கம்*, *விளக்கம்* 1 என எண்ணிடப்பட்டு மேலும் அவ்வாறு எண்ணிடப்பட்ட *விளக்கம்* 1–க்குப்பிறகு, பின்தொடரும் *விளக்கம்* இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

''*விளக்கம் 2*:– இந்த அறிவிக்கையின் நோக்கத்திற்காக, 1996 ஜூலை 23ம் தேதியிட்ட எண்.ஜி.எஸ்.ஆர் 303(உ)ல், இந்திய அரசின் அரசிதழ் அசாதாரணத்தின், பகுதி–II, பிரிவு–3ன் உட்பிரிவு (i)ல் வெளியிடப்பட்ட 1996 ஜூலை 23ம் தேதியிட்ட இந்திய அரசின் அறிவிக்கை நிதி அமைச்சக (வருவாய் துறை) எண் 51/96–சுங்கம்– உடன் விலக்களிப்பானது ஒத்திருக்கும் மற்றும் இது 2017 நவம்பர் 15 முதல் நடைமுறைக்கு பொருந்தும்.

முனைவர்.ச.சந்திரமௌலி,
அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் (முகூபொ).